**Media Release**

உடனடி வெளியீட்டுக்காக

# உள்ளூர் சுயசார்பு வணிகங்களுக்கு ஆதரவாக ஷாப்ஹியர் (ShopHERE)என்னும் திட்டத்தில் முதலில் சேரும் கனடா நாட்டு நகரங்களில் ஒன்றாக ப்ராம்ப்ட்டன் நகரம் இருக்கிறது

ப்ராம்ப்ட்டன், ON (மே 29, 2020) – சமீபத்தில் துவக்கப்பட்ட ஷாப்ஹியர் (ShopHERE) திட்டத்தில் பங்கேற்பதாக முதன் முதலில் அறிவித்த கனடா நாட்டு நகராட்சிகளில் ப்ராம்ப்ட்டன் நகரமும் ஒன்றாகும்.

ஷாப்ஹியர்(ShopHERE), என்பது *கூகிள், ஷாப்பிஃபை, மாஸ்டர்கார்ட், மைக்ரோஸாஃப்ட், ஃபேஸ்புக்,இபே* மற்றும் *இஷிப்பர்* போன்ற வியாபாரிகளுடன் கூட்டு சேர்ந்து டிஜிட்டல் மெயின் ஸ்ட்ரீட் இனால் வழங்கப்படும் ஒரு திட்டமாகும்; இது முதன்முதலில் டோரோன்ட்டோ நகரில் ஆரம்பிக்கப்பட்டு, உள்ளூர் வணிகர்கள் மற்றும் கலைஞர்கள் செலவு ஏதுமில்லாமல் தங்களுக்கான உள்ளூர் சுயசார்பு ஆன்லைன் கடைகளை அமைத்துக்கொள்வதற்கான சேவையை இது வழங்குகிறது. இந்தத் திட்டத்தை தேசிய அளவில் துவக்குவதற்காக கூகிள் நிறுவனம் $1 மில்லியன் நிதிவழங்க உறுதியளித்திருக்கிறது.

சுயசார்புகொண்ட வணிகங்கள் மற்றும் கலைஞர்கள் கோவிட் -19 (COVID-19)தொற்று பரவல் காரணமாக ஏற்பட்ட பாதிப்புக்கு தங்களை தாங்களே சீர்படுத்திக்கொண்டாலும்கூட, அவர்களில் சிலருக்கு மறுதுவக்கம் செய்ய ஆதரவு தேவைப்படுகிறது. ஷாப்ஹியர் (ShopHERE) என்பது, உள்ளூர் வணிகர்கள் தங்கள் வாடிக்கையாளர்களை அடைய புதிய வழிகளைத் தேடவும், வாடிகையாளர்களுக்கு தங்கள் தயாரிப்புக்கள் மற்றும் சேவைகளை தொடர்ந்து விற்பனை செய்வதற்கு ஒரு டிஜிட்டல் தளம் அமைக்கவும் உதவுகிறது

ஷாப்ஹியர் (ShopHERE) திட்டத்தின் ஒரு பகுதியாக, வணிகங்கள் தங்களுக்கென பழக்கப்பட்ட குறிப்பான தகவல், மற்றும் வர்த்தக குறியுடன் கூடிய ஆன்லைன் கடையை பெற்றுக்கொள்ளும் தெரிவு அவர்களுக்கு கிடைக்கும். தங்களின் ஆன்லைன் கடையை அமைத்து, அதனை துவக்கம் செய்வதற்கான உதவியையும் அவர்கள் பெறுவார்கள்; கூடவே டிஜிட்டல் வடிவிலான சந்தைப்படுத்தல், சரக்கு அனுப்பி வைத்தல், மற்றும் சரக்கிருப்பு மேலாண்மை போன்ற பகுதிகளிலும் ஆதரவளிப்பார்கள்.

ஷாப்ஹியர் (ShopHERE) திட்டத்தில் பங்கேற்பதற்கு, ஒரு வணிகத்தில் 10 க்கும் குறைவான பணியாளர்களே இருக்க வேண்டும்; அதுவே காபிக்கடை, சிற்றுண்டியகம் அல்லது மது பார் என்றால் 25 க்கும் குறைவான பணியாளர்களே இருக்க வேண்டும். ஃப்ரான்ச்சைஸீயாகவோ அல்லது சங்கிலித்தொடர் கடைகளாகவோ இருக்கும் வணிகங்கள் இந்த திட்டத்திற்கு தகுதி பெற மாட்டா.

மே மாதம் 13 ஆம் தேதியன்று, உள்ளூர்ப் பொருளாதாரத்தை மறுதுவக்கம் செய்து முன்னெடுத்துசெல்வதில், ஒரு கட்டுக்கோப்பாக இருக்க ப்ராம்ப்ட்டன் நகர் மன்றம் ஒரு பொருளாதார மீட்பு யுக்திக்கு ஒப்புதல் வழங்கியது . ஷாப்ஹியர் (ShopHERE) என்பது, இந்த யுக்தியின் ஒரு பகுதியாகும்; இது நகர நிர்வாகம் நடைமுறைப்படுத்தவிருக்கின்ற பல எண்ணிக்கையிலான முன்னெடுப்புக்களில் ஒன்றாக உடனடியாக செயல்படுத்தவிருக்கும் ஒரு முனைப்பாகும்: இது கோவிட் - 19 (COVID-19) பாதிப்புக்களில் இருந்து விடுபட நினைக்கின்ற உள்ளூர் வணிகங்களுக்கு உதவுவதற்கேயாகும்.

இதில் பங்குபெற வணிகர்கள் இங்கு விண்ணப்பிக்கலாம் https://digitalmainstreet.ca/shophere/.

**அறிஞர் கூற்றுக்கள்**

“நமது உள்ளூர் வணிகர்களே நமது சமுதாயத்தின் முதுகெலும்பு போன்றவர்கள் ஆவர்; அவர்கள் கோவிட் -19 (COVID-19) தொற்றுப்பரவல் காரணமாக பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு ஆதரவளிக்க நாம் பெரிதும் பாடுபடுகிறோம்; இதில் *புதன்கிழமைகளில் கடைகளில் இருந்து வீட்டிற்கு உணவு வாங்கிச்செல்லுதல்* (Takeout Wednesdays) மற்றும் சமீபத்தில் துவக்கப்பட்ட *ப்ராம்ப்ட்டன் உள்ளூர் வியாபாரத்தை ஆதரியுங்கள்* எனும் பிரச்சாரம் ஆகியவை அடங்கும். ஷாப்ஹியர் (ShopHERE) இல் நகர நிர்வாகம் பங்கேற்பது பற்றி அறிவிப்பதில் நான் பரவசம் கொள்கிறேன். நமது சுயசார்பான வணிகங்கள் மற்றும் கலைஞர்கள் இதற்கென விண்ணப்பித்து அவர்களுக்கென கிடைக்கும் வளங்களின் முழுப்பலனையும் அடைய நான் அவர்களை உற்சாகப்படுத்துகிறேன்.”

- *பேட்ரிக் ப்ரவுன்,மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

“கோவிட் -19 (COVID-19) தொற்றுப்பரவலின் சிக்கல் நிறைந்த காலம் முழுவதுமாக, நமது வணிகர்களுடன் நாங்கள் தொடர்ந்து தொடர்பு கொண்டபடியே இருந்து வந்திருக்கிறோம்; அவர்களில் பெரும்பாலோர் எதிர்கொண்டு வருகின்ற தாங்கவொண்ணாத சவால்களையும் கேள்விப்பட்டபடியே இருக்கிறோம். டிஜிட்டல் ரீதியான முன்னிருப்பை மேம்படுத்துவதில் நமது ஆதரவு தேவை என அவர்கள் எம்மிடம் கூறியதை செவி மடுத்தோம். ஷாப்ஹியர் (ShopHERE) என்பது அவர்களுக்கு அருமையான ஒரு தீர்வாகும்; இது அவர்களின் ஆன்லைன் பொருள்/சேவை வழங்கலை எப்படிச் செய்யலாம் என்பதற்கான புதிய வணிக மாதிரிகளை உருவாக்க உதவுகின்ற அற்புதமான தீர்வாகும். இந்த தேசிய அளவிலான முனைப்புக்கு ஆதரவளிக்க கூட்டு சேர்ந்திருக்கும் பல நிறுவனங்களில், உள்ளூர் இஷிப்பர் நிறுவனமும் ஒன்றாகும்.”

- *பால் வின்செண்ட், பிராந்திய கவுன்சிலர், வார்டுகள் 1 & 5; துணை அணித்தலைவர், மேயரின் கோவிட்-19 பொருளாதார ஆதரவுப் பணிப்படை*

“பொருளாதார மீட்பினை நாம் எதிர்நோக்கியிருக்கையில், ப்ராம்ப்ட்டன் நகர பொருளாதாரத்திற்கு ஊட்டம் கொடுக்கும் வகையிலான் பலதரப்பட்ட திட்டங்கள் மற்றும் அணுகுமுறைகளை நாம்

நடைமுறைப்படுத்தி, நமது உள்ளூர் வணிக சமுதாயத்திற்கு ஆதரவு வழங்குகிறோம். ஷாப்ஹியர் (ShopHERE) என்பது மட்டுமே நமது வணிகங்கள் முன்னோக்கிச் செல்வதற்கான அணுகுமுறைகள் பற்றி மறுசிந்தனை செய்து, தேவையான ஆதரவுகளைக் கொடுக்கக்கூடிய ஒரு முனைப்பாகும்."

- *மைக்கேல் பல்லேஸ்சி, பிராந்திய கவுன்சிலர், வார்டுகள் 2 & 6; துணை அணித்தலைவர், மேயரின் கோவிட்-19 பொருளாதார ஆதரவுப் பணிப்படை*

"எப்போதும் போலவே, நமது குடியிருப்புவாசிகள் மற்றும் வணிக சமுதாயத்திற்கு சேவை செய்வதில் உதவுவதற்காக, நமது அலுவலர்கள் வணிக கூட்டு அமைப்பதிலும் புதிய அணுகுமுறைகளை நடைமுறைப்படுத்துவதிலும் உறுதிப்பாடு கொண்டுள்ளனர். ஷாப்ஹியர் (ShopHERE) என்பது நமது நிறுவன அமைப்புக்கும், நமது சுய சார்பான வணிகங்கள் மற்றும் கலைஞர்களுக்கும் அருமையான பொருத்தம் வாய்ந்த ஒரு விஷயமாகும்."

- *டேவிட் பேர்ரிக், தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்*

-30-

கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 650,000 மக்களையும் 70,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது. நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். Twitter, Facebook, மற்றும் Instagram ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். www.brampton.ca இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல் பரிமாற்றம்
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca